Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

## சண்முகா கல்லூரியில் முதுகலை ஆராய்ச்சி ஆங்கிலத் துறை மற்றும் சண்முகா கல்லூரி தர மதிப்பீட்டு குழு சார்பாக இணைய வழி கருத்தரங்கம் (வெப்பினார்)

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் முதுகலை ஆராய்ச்சி ஆங்கிலத் துறை சார்பாக இணையவழி கருத்தரங்கம் (வெப்பினார்) **"ஆங்கில மொழி கற்ப்பித்தலில் வளர்ந்து வரும் புதுமைகள்"** என்ற பொருண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் உயர்திரு. **டி.ஏ.எஸ்.முத்து.** பொருளாளர் உயர்திரு. **எம்.சீனுவாசன்,** கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** உள்ளிட்டோரின் வாழ்த்துகளோடு, நிகழ்ச்சியில் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** தொடக்கவுரையாற்றினார். முதுகலை ஆராய்ச்சி ஆங்கிலத் துறை தலைவர் முனைவர் **கி.கோவிந்தராஜ்** அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்வில் வங்கதேசத்தைச் சார்ந்த ஜஹாங்கீர் நகர் பல்கலைக் கழக ஆங்கிலத் துறை பேராசிரியர் முனைவர் **மா.மணிருஷாமான்** கலந்து கொண்டு ஆங்கில மொழி கற்ப்பித்தலில் வளர்ந்து வரும் புதுமைகள் மற்றும் பெருந்தொற்று காலத்தில் ஆசிரியர்கள் இணைய வழியாகக் கற்பித்தல் பற்றி சிறப்பாக உரையாற்றினார். இதில் சீனா, பிலிப்பைன்ஸ், ஜப்பான், இலங்கை, வங்கதேசம், வடஇந்தியா மற்றும் தமிழகம் போன்ற பகுதிகளில் இருந்து பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவ, மாணவியர்கள் இணைய வழியாக பங்கு பெற்றனர். நிறைவாக பேராசிரியர் முனைவர் **க.மல்லிகேசன்** நன்றியுரையாற்றினார். முன்னதாக பேராசிரியை **தி.அனிதா** மற்றும் பேராசிரியை **பா.பத்மாவதி** நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்றனர்.

செயலர் மற்றும் தாளாளர்